**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. STC.870/2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராதிகா | Prosecution | PW–1 Cross |
| Father Name | க/பெ.அய்யாதுரை | Court | JM, Court, Sirkali. |
| Village | திருவாலி | Taluk | Sirkali. |
| District | மயிலாடுதுறை | Age | 37/2026 |

**Solemnly affirmed by Tmt. R. Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**09.07.2026**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனது கணவர் பெயர் என்ன என்றால் அய்யாதுரை ஆகும். அவர் எப்போது இறந்தார் என்றால் 22.10.2024 ல் இறந்தார். என் கணவர் என்ன தொழீல் செய்தார் என்றால் ஏற்றுமதி தொழில் செய்து வந்தார். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வீட்டுக்குடித்தனம் செய்து டைலரிங் செய்வேன். நான் எத்தனை ஆண்டுகாலமாக டைலரிங் செய்து வருகிறேன் என்றால் சுமார் 5 வருடங்களாக செய்கிறேன். எதிரி எனக்கு காசோலை எந்த தேதியில் கொடுத்தார் என்றால் 10.08.2025 ம் தேதி கொடுத்தார். அந்த காசோலையை எனது வீட்டில் வந்து கொடுத்தார் என்றால் சரிதான். அந்த ரூ.10 லட்சத்திற்கான காசோலையை கொடுக்கும் போது சாட்சிகள் யாரும் இல்லை நான் மட்டுமே இருந்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த ரூ.10 லட்சம் எனது கை இருப்பில் இருந்து ரொக்கமாக கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.10 லட்சம் எப்படி வந்தது என்றால் நான் கணவர் சம்பாதித்த பணம் மற்றும் நான் வேலை செய்து வந்த பணம் சேமித்து வைத்திருந்தது ஆகும்.

நான் வைத்திருந்த 10 லட்சத்திற்கான income tax return வைத்திருந்தேனா என்றால் இல்லை. என் கணவர் தொழில் செய்தது அதிகாரபூர்வமாக அரசு அனுமதி பெற்ற நிறுவனமா என்றால் இல்லை. மேற்படி எனது கணவர் செய்யும் தொழில் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தொழில் என்றால் அதற்கான அரசாங்க IE Code and current account and government registration உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் எதிரி கொடுத்த காசோலையை வெறும் காசோலையாக கொடுத்தாரா அல்லது பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால்

பூர்த்தி செய்த நிலையில் தான் கொடுத்தார். என் கணவர் பெயர் அய்யாதுரை என்று சொல்லும் நிலையில் காசோலையில் எனது இனிசியல் K என்று போடப்பட்டுள்ளது என்றால் அது எனது தந்தை பெயர் ஆகும். எனது அரசு வழங்கிய அடையாள அட்டைகளில் K என்று தான் இனிசியல் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை A என்று தான் இருக்கும். எனது நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் பின் தேதியிட்டு எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லியிருப்பதன் பொருள் எ ன்ன என்றால் எதிரி காபசோலையில் 10.11.2025 என்று தேதியிட்டு என்னிடம் கொடுத்து, எதிர் வரும் 3 மாதங்களுக்குள் பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்றும் அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் காசோலையை வசூலுக்கு போட்டுவிடலாம் என்றும் கூறினார். இந்த கடன் தொடர்பாக பிராமிசரி நோட்டோ அல்லது எழுத்துபூர்வமான ஏதேனும் ஆதாரங்களோ வைத்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் இந்த வழக்கு காசோலை மட்டும் தான் உள்ளது.

இந்த வழக்கு காசோலையில் காணப்படும் தேதி தொாகை உள்ளிட்ட வாசகங்கள் எதிரியால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. அவர் தான் என் முன்னிலையில் அதனை பூர்த்தி செய்தார். அந்த கையொப்பம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் எனது கணவரை தான் எதிரிக்கு லோன் ஏஜென்ட் என்கிற முறையில் தெரியும் என்றாலும் சரியல்ல. ஏற்கனவே என் கணவர் மூலமாக எதிரி வங்கியில் கடன் வாங்கி அதனை திரும்ப செலுத்தியுள்ளார் என்றாலும் அதற்கான ஆவணங்கள் எதிரி வசம் உள்ளது என்றாலும் அது பற்றியெல்லாம் எனக்கு தெரியாது. எதிரி என் வீட்டிற்கு ஒரு போதும் வந்தது இல்லை என்றாலும் இந்த நீதிமன்றத்திற்கு வந்த போது தான் என்னை பார்க்கிறார் என்றால் சரியல்ல. ரூ.10 லட்சம் பணம் எதிரிக்கு கொடுத்ததாக சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமோ, வங்கியிலிருந்து அந்த பணம் எடுக்க பட்டடதற்கான ஆவணங்களோ தாக்கல் செய்யப்படாத நிலையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. அந்த காசோலையை உண்மையில் எதிரி என் கணவரிடம் லோன் விசயமாக கொடுத்து வைத்திருந்தது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது.**

**மறு விசாரணை இல்லை.**